# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழின் செம்மைகருதி அதற்குச் சூட்டப்பட்ட பெயர்

அ) செந்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) தீந்தமிழ் ஈ) தேன்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மாசி என்ற மாதத்தின் தமிழ்ப் பெயர்

அ) சுறவம் ஆ) கன்னி இ) கும்பம் ஈ) மீனம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. அறம் பொருள் இன்பம் என்பது

அ) முப்பால் ஆ) முத்தமிழ் இ) முப்பொருள் ஈ) மூவிடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. மரத்தில் இருந்து பழங்கள் ____________ என உதிர்ந்தன.

அ) பொலுபொலு ஆ) குளுகுளு இ) சிலுசிலு ஈ) வழுவழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. குற்றியலுகர எழுத்து

அ) நு ஆ) று இ) மு ஈ) லு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மாந்த நாகரிகமும் உலகின் முதல் மொழியும் தோன்றிய இடம்

அ) ஆபிரிக்காக்கண்டம் ஆ) ஐரோப்பாக்கண்டம்

இ) குமரிக்கண்டம் ஈ) அமெரிக்காக்கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சேயோன் நண்பனின் வீட்டைத் ____________ அலைந்தான்.

அ) தொடர்ந்து தொடர்ந்து ஆ) தளர்ந்து தளர்ந்து

இ) தெரிந்து தெரிந்து ஈ) தேடித்தேடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. ஐந்து நரம்புகள் உள்ள வீணையின் இசை

அ) துத்தம் ஆ) திறம் இ) பண் ஈ) விளரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. **"ஓடிடும் தமிழா நில்நீ ஒரு கணம் மனதைத் தட்டு.....** என்று கூறியவர்

அ) அம்பி　ஆ) தாமரைக்கண்ணன்　இ) அமுதன்　ஈ) காசிஆனந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. உணவு உண்டான். இதில் தொக்கி நிற்கும் வேற்றுமை உருபு

அ) ஆல்　ஆ) கு　இ) ஐ　ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. சிறுவன் பசியினால் ________________ க் காணப்பட்டான்.

அ) வாடிவதங்கி　ஆ) பார்த்துப்பழகி　இ) பாய்ந்து பதுங்கி　ஈ) ஓடிஒதுங்கி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இராவணனின் தம்பி

அ) வச்சிரவாயு　ஆ) குகன்　இ) வாலி　ஈ) கும்பகண்ணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைப்பிடித்துக் கொண்டுபோய்க் காவேரி ஆற்றுக்கு அணை கட்டிய மன்னன்

அ) குலோத்துங்சோழன்　ஆ) இராசராசசோழன்

இ) கரிகாற்சோழன்　ஈ) இராசேந்திரசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. தொல்பழங்காலத்தில் தமிழகத்தின் தலைநகர்

அ) பர்மா　ஆ) இலங்கை　இ) இந்தியா　ஈ) நேபாளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **'சாம்பல் மேட்டிலிருந்து ஒரு நூலகம்'** என்ற கவிதையை எழுதியவர்

அ) எசு.ஆ. இரங்கநாதன்　ஆ) எம்.ஏ.நுக்மான்

இ) காமினி திசநாயக்கா　ஈ) ஏ.ஐ. குணத்திலக்கா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. **காளைமாடு** என்பது

அ) களிறு　ஆ) கரி　இ) ஏறு　ஈ) கடுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சிறப்பு அறியா இயல்பு என்பதைக் குறிக்கும் பழமொழி

அ) பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்.

ஆ) இரக்கப் போனாலும் சிறக்கப்போ.

இ) காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.

ஈ) கழுதை அறியுமா கற்பூர வாசனை.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கண்ணகியின் சிலம்பின் உள்ளே இருந்தது

அ) வைடூரியம் ஆ) முத்து இ) மாணிக்கம் ஈ) பவளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. இலங்கை தமிழ்நாட்டு அரசியல் உறவு அரச மட்ட உறவான காலம்

அ) சோழர்காலம் ஆ) பல்லவர்காலம் இ) சேரர்காலம் ஈ) பாண்டியர்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. குளத்தில் வெள்ளைத் தாமரை மலர்ந்திருந்தது. இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள அடைமொழி

அ) குளம் அ) தாமரை இ) வெள்ளை ஈ) மலர்ந்திருந்தது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பூம்புகார் நகரை ஆணாக உருவகப்படுத்திப் பாடியவள்

அ) ஐயை ஆ) மாதவி இ) கண்ணகி ஈ) மணிமேகலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. அளவின்றிச் செலவழித்தல் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) தோள்கொடுத்தல் ஆ) தலைகவிழ்தல்

இ) அடுத்துக்கெடுத்தல் ஈ) அள்ளிஇறைத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. அஞ்சல் எழுதும்போது பெரியோரை ________________ என விளிப்பர்.

அ) மேதகு ஆ) மாண்புமிகு இ) அன்புடையீர் ஈ) அன்புடன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **'கொவ்வை இதழ் மகளே - என்**
**குவிந்த நவரத்தினமே'** என்ற நாட்டார் பாடல்

அ) தொழிற்பாட்டு ஆ) தாலாட்டுப்பாட்டு
இ) ஏர்ப்பாட்டு ஈ) காதற்பாட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மாசாத்துவன் என்பவன் ______________ தந்தை.

அ) கண்ணகியின் ஆ) மாதவியின்
இ) கோவலனின் ஈ) மணிமேகலையின்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. எல்லை கடந்த சினம் என்பதை விளக்கும் சொல்

அ) ஏற்றம் ஆ) கூற்றம் இ) சீற்றம் ஈ) தோற்றம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. உருபு ஏற்காத வேற்றுமை

அ) முதலாம் வேற்றுமை ஆ) ஏழாம் வேற்றுமை
இ) மூன்றாம் வேற்றுமை ஈ) நான்காம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. கேட்டன என்பதன் வினையடி

அ) கேட்டு ஆ) கேடு இ) கேட்ட ஈ) கேள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் இலவய (இலவச) நூல்நிலையத்தைத் தொடங்கியவர்

அ) ஐசேக் தம்பையா ஆ) க.மு.செல்லப்பா
இ) அல்பிரட் துரையப்பா ஈ) கே. நரசிம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஓடின என்ற சொல்லின் இடைநிலை

அ) ப் ஆ) ன் இ) இன் ஈ) கிறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. **"பல்லில்லா முதியவரும் வீறு தேக்க வடித்தெடுத்த அவைகற்கள்......** என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள கவிதைத்தலைப்பு எது? அக்கவிதையை எழுதியவர் யார்?

2. எல்லாளனுக்கு முன் அநுராதபுரத்தைக் கைப்பற்றிச் சிறப்பாக ஆட்சி செய்த இரு தமிழ் மன்னர்களும் யாவர்?

3. இராவணன் கற்ற கலைகளில் இரண்டைத் தருக.

4. ***"மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்***
   ***கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும்........***

   அ) இப்பாடல் வரிகளில் குறிப்பிடப்படும் பெண் யார்?

   ஆ) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

5. நாட்டார் பாடலின் வேறு பெயர்கள் இரண்டைத் தருக.

6. சோழர் ஆட்சியின் போது இலங்கையின் தலைநகராக இருந்த இடம் எது?

7. அ) யாழ் நூலகம் எக்கட்டிடக்கலையை ஒத்தது?

ஆ) இதை வடிவமைத்தவர் யார்?

புள்ளிகள் 10

**3) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- தொடர்ந்து துன்பம் வந்தாலும்
  துணிந்து நிற்போம் விடமாட்டோம்

- எத்தனை மொழிகள் கற்றாலும்
  எம் தாய்மொழி போலே அது வருமா

- தமிழனாய் வாழ்ந்து தலைநிமிர்வோம்
  தமிழ்ப்பண்பாட்டுடனே நடைபயில்வோம்

புள்ளிகள் 10

## 4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் மானத்தையே தம் உயிரினும் மேலாகப் போற்றினர். அதனால் வீரமே வாழ்வு எனப் போற்றித் தம் உயிரை வீரத்திற்காகக் கொடுக்க முன்வந்தனர். புறநானூறு என்னும் கடைக்கழக இலக்கியம் தமிழரின் வீரம், மானம், கொடை பற்றிக்கூறும் நூலாகும். கலிங்கத்துப்பரணி என்னும் இலக்கியம் சோழமன்னன் ஒருவன் கலிங்கநாட்டை வெற்றி கொண்ட போரைப் பற்றிக்கூறுகின்றது. போரிடும் போது பகைவனை வென்றாகவேண்டும் அதற்காக அவனைப் போரில் கொல்லலாம். ஆனால் போரிடும் போது பகைவனுக்கு ஒரு திடுநேர்கை ஏற்பட்டு விட்டால் அதிலிருந்து அவனைக் காப்பாற்றுவர். இது பேரறம் கொண்ட போரறம். இது தமிழரினத்திற்கே சொந்தமான சான்றாண்மை கொண்ட பேராண்மை. தனக்கு நிகரான ஆற்றலுடையோரை எதிர்த்துப் போரிடுவதே வீரமும் நல்லியல்புமாகும். எனவே போரிடும் ஆற்றல் அற்றோர் போரின் போது துன்புறக்கூடாது என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. அதனால் போர் தொடங்குவதற்கு முன் போருடன் தொடர்பில்லாத மக்களை வேறிடங்களுக்குப் பாதுகாப்பாகச் செல்லும்படி கூறிவிட்டே போரைத் தொடங்குவர். இவ்வாறாகப் பொதுமக்களைக் காக்கும் அறந்தவறாத பெருவீரம் தமிழருடையது.

1. எது பேரறம் கொண்ட போரறம்?

______________________________________________

______________________________________________

2. சோழமன்னன் வெற்றிகொண்ட போரைப் பற்றிக் கூறும் நூலின் பெயர் என்ன?

______________________________________________

______________________________________________

3. தமிழர் தம் உயிரை எதற்காகக் கொடுக்க முன்வந்தனர்?

4. தமிழர் எதனைத் தம் உயிரினும் மேலாகப் போற்றினர்?

5. எது தமிழரின் கொள்கையாக இருந்தது?

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. செயப்படுபொருள் குன்றிய சொல்லியம் , செயப்படுபொருள் குன்றாச் சொல்லியம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   குன்றிய சொல்லியம் :- ____________________

   குன்றாச் சொல்லியம்:- ____________________

2. பார்த்தனன் என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

   ____________________

3. தரப்பட்டுள்ள சொற்களின் தொகைகளை இனங்கண்டு எழுதுக.

   வெண்சுவர் :- ____________________

   விளைபயிர் :- ____________________

   மலைத்தோள் :- ____________________

4. அ) தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் எத்தனை?

   ____________________

   ஆ) அவற்றின் வகைகளைத் தருக.

   ____________________

   ____________________

5. கீழேயுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

   வாழையடிவாழை :- ____________________

   ____________________

   கல்விகேள்வி :- ____________________

   ____________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

அறிவியல் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதுவளர்ந்து செல்லும் விரைவினைப் பார்க்கும் போது இதன் வளர்ச்சி எதிற் போய் முடியுமோ என்ற எண்ணமும் ஏக்கமும் ஏற்படுகின்றது. அதேநேரம் இந்த அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தினை ஒரு காலகட்டத்தின் பின்னர் மக்களால் தாங்கமுடியுமா என்ற ஐயமும் ஏற்படுகின்றது. அறிவியல் வளர்ச்சியினால் நன்மை என்றாலும் அதனால் ஏற்படும் தீமைகளை எதிர்கொள்ள முடியாமல் மக்கள் திண்டாடுவதை மறுக்கமுடியாது. கொடிய போர்க்கருவிகளின் தாக்கமே இன்று உலகை உலுக்கி வருகின்றன. அதுமட்டுமா எதிலும் பொறிகளின் செயற்பாடே மேலாண்மை செலுத்தி வருகின்றன. அதனால் மக்கள் வேலையின்றி வீட்டிலேயே முடங்கிக்கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் இந்த அறிவியல் தன் விரைவைக் கூட்டி மக்களின் சிந்தனை வளர்ச்சியைத் தடுக்கின்றது. இதனால் பொழுதுபோக்கைக் கூட மக்கள் இருந்த இடத்திலேயே கழிக்கின்றனர். வெளியே சென்று பொழுதுபோக்குவதனை விடுத்து வீட்டுக்குள் ஒரே இடத்தில் இருந்து தொலைக்காட்சி பார்த்தல், முகநூல் போன்றவற்றில் நீண்ட நேரம் தம் பொழுதைக் கழிக்கின்றனர். பெரியோர் முதல் குழந்தைகள் வரை அனைவரையும் அறிவியல் வளர்ச்சி ஆட்டிப்படைப்பதை யாராலும் மறுப்பதற்கில்லை. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற பழமொழி அறிவியல் வளர்ச்சிக்கு மிகவும் பொருந்தும். என்னதான் அறிவியல் வளர்ந்தாலும் மக்கள் தம் பகுத்தறிவினைப் பயன்படுத்தி இதன் தாக்கத்தில் இருந்து விடுபட வேண்டும்.

சுருக்கத்திற்கான குறிப்புகள் :

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

| புள்ளிகள் 05 |
|---|

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இக்காலக் கவிதை இலக்கியங்கள்
  பாடநூலில் உள்ள கவிதைகளில் உம்மைக் கவர்ந்த கவிதை எது? ஏன்?

- இலங்கை - தென்னிந்திய அரசியல் உறவுகள்

- தாய்மண் மீட்பில் புலம்பெயர் தமிழ் இளையோரின் பங்கு

| புள்ளிகள் 20 |
|---|